அடையாள இலக்கம்

| C | | | | | | |
|---|---|---|---|---|---|---|

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2023

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

- **BLANK PAGE -**

**(அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. பகலெல்லாம் : ________________ + ________________
2. தமிழிலக்கியம் : ________________ + ________________
3. புளிச்சோறு : ________________ + ________________
4. மரவேர் : ________________ + ________________
5. நீலவானம் : ________________ + ________________

(5 புள்ளிகள்)

**(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. கடல் + உணவு : ________________________________
2. சங்கம் + காலம் : ________________________________
3. எடுத்து + தா : ________________________________
4. அன்பு + இல்லை : ________________________________
5. பல் + பசை : ________________________________

(5 புள்ளிகள்)

**(இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருள் கொண்ட சொற்களை எழுதுக.**

1. வினா : ______________________
2. பெரிய : ______________________
3. பகல் : ______________________
4. பழமை : ______________________
5. நீதி : ______________________

(5 புள்ளிகள்)

**(ஈ) பின்வரும் சொற்களின் உயர்திணைப் பெண்பாற் சொற்களை எழுதுக.**

1. தம்பி : ______________________
2. அரசன் : ______________________
3. நடிகன் : ______________________
4. மாமா : ______________________
5. பணக்காரன் : ______________________

(5 புள்ளிகள்)

**(உ) அடைப்புக் குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கீழே தரப்பட்ட வசனங்களிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது**.

1. மயில் ஓர் அழகான ________________. (பறவை, பரவை)

2. பறவைகள் காலையில் ________________ தேடிப் பறக்கும். (இறை, இரை)

3. ________________ காலம் குளிராக இருக்கும். (மாறி, மாரி)

4. எனது அம்மா ஆசிரியராக ________________ செய்கிறார். (வேளை, வேலை)

5. தாமரை மலர் ________________ நிறைந்தது. (அலகு, அழகு)

6. அம்மா வாசலில் ________________ போட்டார். (கோளம், கோலம்)

7. யானை ________________ நிறைந்த ஒரு மிருகம். (பழம், பலம்)

8. சுற்றுலாவிற்கு ________________ பேர் சென்றனர். (எண்பது, என்பது)

9. கரும்பிலிருந்து ________________ தயாரிக்கலாம். (வெல்லம், வெள்ளம்)

10. வாணி தைப்பொங்கலுக்கு தன் நண்பர்களை வீட்டிற்கு ________________. (அழைத்தாள், அளைத்தாள்)

(10 புள்ளிகள்)

**(ஊ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்கள் எழுதுக.**

**குறிப்பு** : ஐந்து (5) சொற்களுக்குக் குறையாமல் வசனம் அமைய வேண்டும்.

1. தைப்பொங்கல் : ______________________________

______________________________

2. பள்ளிக்கூடம் : ______________________________

______________________________

3. விளையாட்டு : ______________________________

______________________________

4. உணவு : ______________________________

______________________________

5. புத்தகம் : ______________________________

______________________________

6. ஔவையார் : ______________________________

______________________________

7. தாமரை மலர் : ______________________________

______________________________

8. முதியோர் : ______________________________

______________________________

9. இணையம் : ______________________________

______________________________

10. அலைபேசி : ______________________________

______________________________

(20 புள்ளிகள்)

**(எ) கோடிட்ட இடங்களிலே பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:**

1. திருவள்ளுவர் ______________________ என்ற நூலை எழுதினார்.
2. மணி ______________________ போல் மெதுவாக நடந்தான்.
3. இளமையில் ______________________ சிலை மேல் எழுத்து.
4. கடும்மழை பெய்ததால் வீடுகளுக்குள் ______________________ புகுந்தது.
5. எனக்கும் என் நண்பனுக்கும் இடையில் அடிக்கடி சண்டை ______________________ வழக்கமாகிவிட்டது.
6. பலகொடிய ______________________ மக்கள் துன்பப்படுகின்றனர்.
7. பசு ஒரு ______________________ மிருகம்.
8. அம்மா தோட்டத்துச் செடிகளுக்கு ______________________ ஊற்றினார்.
9. மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் என்பன ___________________ எனக் கூறப்படுகின்றன.
10. மணமக்களை உற்றார், உறவினர் அனைவரும் ______________________.

(10 புள்ளிகள்)

**(ஏ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

புல், செடி, கொடி, மரம் போன்றவற்றை நாம் தாவரங்கள் என்று கூறுகிறோம். தாவரங்களில் பலவகை உண்டு. சில வகை (1)____________________ மனித இனத்துக்கு அதிகப் பலன் அளிக்கின்றன.

மா, பலா, வாழை, கொய்யா போன்ற மரங்கள் காயும் கனியும் (2)____________________ . இக்கனிகள் நமக்கு உணவாக அமைகின்றன. (3)____________________ உதவும் பொருள்களை வழங்கும் பயனுள்ள மரங்களில் முருங்கை மரம், கறிவேப்பிலை மரம், புளிய மரம் ஆகியவையும் அடங்கும். முருங்கை மரத்தின் காயும் கீரையும் சத்துள்ள (4)____________________ ஆகும்.

நாம் வீட்டில் பயன்படுத்தும் மேசை, நாற்காலி போன்ற அறைக்கலன்களும் (5)____________________ செய்யப்படுகின்றன. தேக்கு மரமும் வேப்ப மரமும் இவ்வகையில் பயன்படுகின்றன.

நாம் எழுதப் பயன்படுத்தும் (6)____________________ மரக்கூழிலிருந்து செய்யப்படுகின்றன. மேலும், சந்தன மரத்திலிருந்து (7)____________________ சந்தன எண்ணெயும், தென்னை மரத்திலிருந்து தேங்காய் எண்ணெயும் எடுக்கப்படுகின்றன. 'யூகேலிப்டஸ்' எனப்படும் மரத்தின் (8)____________________ ஒருவகை எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் தலைவலிக்கு (9)____________________ பயன்படுகின்றது. வேப்ப மரத்தின் இலை, பூ, விதை ஆகியவை மருந்தாகவும் பயன்படுகின்றன.

மேலும், மரங்கள் நமக்கு இனிய நிழல் தருவதோடு, மழை (10)____________________ தட்ப வெப்ப நிலை மாறுவதற்கும் காரணமாக இருக்கின்றன. இவ்வாறு நமக்குப் பல வகையிலும் பயன்தரும் தாவரங்களைப் பாதுகாப்பது நம் கடமையாகும்.

| | | |
|---|---|---|
| தாவரங்கள் | தருகின்றன | உணவுக்கு |
| இலையிலிருந்து | மரத்தால் | மரம் |
| உணவுப்பொருள்கள் | நறுமணமுள்ள | மருந்தாக |
| தாள்கள் | பெய்வதற்கும் | சமையலுக்கு |

(15 புள்ளிகள்)

**(ஐ) கீழே தரப்பட்ட கவிதையைப் படித்த பின்னர் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.**

**விளையாடு! விளையாடு!**

விளையாடு தம்பி விளையாடு
வெளியில் சென்று விளையாடு
திடலில் நீயும் விளையாடு
தினமும் நீயும் விளையாடு
மாலைப் பொழுதில் விளையாடு
மகிழ்ச்சி பொங்கும் விளையாடு
உடம்பு வியர்க்க விளையாடு
உறுப்புகள் வலுப்பெற விளையாடு
தசைகள் பலம்பெற விளையாடு
தயக்கம் வேண்டாம் விளையாடு
அறையில் முடங்காது விளையாடு
அலைபேசி வேண்டாம் விளையாடு

முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலஷ்மி

**கேள்விகள்:**

1. பாடலாசிரியர் எங்கே எப்பொழுது விளையாட வேண்டும் என்று கூறுகின்றார்?

___

___

___

2. விளையாடும் பொழுது என்ன உணர்வு பொங்கும் என்று கூறுகின்றார்?

___

___

___

3. விளையாடும் பொழுது என்னென்ன மாற்றங்கள் உடலில் ஏற்படும்படி விளையாட வேண்டும் என இந்தப் பாடலில் கூறப்படுகின்றது?

___

___

___

4. விளையாடுவதனால் வேண்டாது விட்டுவிடக் கூடிய மூன்று விடயங்களை பாடலில் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவை யாவை?

______________________________

______________________________

______________________________

5. நீ விளையாடும் பொழுது உனக்குக் கிடைக்கக் கூடிய மூன்று நன்மைகளை எழுதுக.

______________________________

______________________________

______________________________

(10 புள்ளிகள்)

**(ஓ) குறைந்தது 60 சொற்களில் கீழே தரப்பட்ட தலைப்பைப் பற்றி எழுதுக.**

தமிழர்கள் கொண்டாடும் ஒரு பண்டிகை

(15 புள்ளிகள்)